# பத்திரிக்கைச் செய்தி

## 17 சென்ட் நிலத்தினை தானா செட்டில்மெண்டாக பதிவு செய்ய லஞ்சம் வாங்கிய சார்பதிவாளர் மற்றும் தனிநபர் கைது

புகார்தாரர் திரு.பழனிவேல், சேலம் மாவட்டத்தில் வசித்துவருகிறார். புகார்தாரர் தன்னுடைய தாயார் பெயரில் உள்ள 17 சென்ட் நிலத்தினை தன்னுடைய பெயருக்கு மாற்றம் செய்ய திரு.கண்ணன், தனிநபர் மூலமாக தாடகபட்டி சார் பதிவாளர் அலுவலகம், சேலம் பதிவு செய்ய விண்ணப்பித்திருந்தார். திரு.செல்வபாண்டி, சார்பதிவாளர், தாடகபட்டி சேலம் மாவட்டம் அவர்கள் புகார்தாரரின் விண்ணபத்தினை பரிசீலனை செய்து பதிவு செய்வதற்கு தனக்கு ரூ.50,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென திரு.கண்ணன் என்பவர் மூலமாக கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்கவிரும்பாத புகார்தாரர், சேலம் லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 06.02.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு. செல்பாண்டி, சார்பதிவாளர் மற்றும் திரு.கண்ணன், தனிநபர், ஆகிய இருவரும் லஞ்சபணம் ரூ.50,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டனர்.